# யூலை – 13 – சனி

புனித ஹென்றி

**ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! திபா. 105:1**

---

## முதல் வாசகம்: தொடக்க நூல் 49:29–32, 50:15–26

அந்நாட்களில் யாக்கோபு தம் புதல்வர்களுக்குக் கட்டளையிட்டுக் கூறியது: ”இதோ நான் என் இனத்தவரோடு சேர்க்கப்படவிருக் கிறேன். என்னை என்தந்தையருடன் இத்தியனான எப்ரோனின் நிலத்திலுள்ள குகையில் அடக்கம்செய்யுங்கள். அது கானான் நாட்டில் மம்ரே பகுதிக்கு அருகேயுள்ள மக்பேலாவின் நிலத்தில் அமைந்துள்ளது. ஆபிரகாம் இத்தியனான எப்ரோனிடமிருந்து அந்த நிலத்தைக் கல்லறை நிலத்திற்கென விலைக்கு வாங்கினார். அங்கே ஆபிரகாமையும் அவர் மனைவி சாராவையும் அடக்கம்செய்தனர் அங்கு ஈசாக்கையும் அவர் மனைவி ரெபேக்காவையும் அடக்கம் செய்தனர். அங்கே தான் நானும் லேயாவை அடக்கம் செய்துள்ளேன். அந்நிலமும் அக்கல்லறையும் இத்தியரிடமிருந்து விலைக்கு வாங்கப்பெற்றவை.” அப்பொழுது, யோசேப்பின் சகோதரர் தங்கள் தந்தை இறந்துவிட்டதைக்கண்டு, ”யோசேப்பு நாம் அவருக்குச் செய்த அனைத்துத் தீமைகளையும் கருதி, இப்பொழுது நம்மை வெறுத்து உறுதியாகப் பழிவாங்குவர்” என்று எண்ணினர். எனவே அவர்கள் யோசேப்புக்கு இவ்வாறு செய்தி அனுப்பினர் ”உம் தந்தை இறப்பதற்குமுன், ”உன்சகோதரர் உனக்குத் தீங்கிழைத் ததன் மூலம் உண்டான குற்றப்பழியையும், பாவத்தையும் மன்னித்து விடு என்று யோசேப்புக்குச் சொல்லுங்கள்” என்று எங்களுக்குக் கட்டளையிட்டார். ஆகவே, இப்பொழுது உம் தந்தையின் கடவுளுடைய அடியார்களாகிய எங்களின் குற்றப்பழியை மன்னித்தருளும். ”அவர்கள் இதைத் தம்மிடம் அறிவித்தபோது யோசேப்பு அழுதார். அவர் சகோதரரும் அழுது அவர்முன் தாள்பணிந்து, ”நாங்கள் உம் அடிமைகள்” என்றனர். யோசேப்பு அவர்களிடம், ”அஞ்சாதீர்கள் நான் கடவுளுக்கு இணையானவனா? நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். ஆனால் கடவுள் அதை இன்று நடப்பதுபோல், திரளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார். ஆகவே இப்பொழுது அஞ்சவேண்டாம். உங்களையும் உங்கள் குழந்தை களையும் நான் பேணிக்காப்பேன்” என்றார். இப்படியாக அவர் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார் அவர்களுடன் இதமாகப் பேசிவந்தார். யோசேப்பும் அவர் தந்தையின் வீட்டாரும் எகிப்தில் குடியிருந்தனர். யோசேப்பு நூற்றுப்பத்து ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். எப்ராயிமின் மூன்றாம் தலைமுறையைப் பார்க்கும் வரையிலும் மனாசேயின் மகன் மாக்கிரின் குழந்தைகள் தம்மடியில் விளையாடும் வரையிலும் யோசேப்பு உயிர்வாழ்ந்தார். யோசேப்பு தம் சகோதரரிடம், ”நான் சாகும் வேளை வந்துவிட்டது. ஆனால் கடவுள் உங்களைக் கனிவுடன் சந்திக்க உறுதியாக வருவார். ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபுக்குத் தாம் கொடுப்பதாக வாக்களித்த நாட்டிற்கு இந்த நாட்டிலிருந்து அவர் உங்களை அழைத்துச் செல்வார்” என்றார். மீண்டும் யோசேப்பு ”கடவுள் உங்களைக் கனிவுடன் சந்திக்க உறுதியாக வருவார். அப்பொழுது, நீங்கள் என் எலும்புகளை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள்” என்றுசொல்லி, இஸ்ரயேல் புதல்வரிடமிருந்து உறுதிமொழி பெற்றுக்கொண்டார். யோசேப்பு தம் நூற்றுப்பத்தாம் வயதில் இறந்தார். அவரது உடலை மருத்துவ முறைப்படி பாதுகாப்புச் செய்து எகிப்தில் ஒரு பெட்டியில் வைத்தனர்.

**பதில்பாடல் :** கடவுளை நாடித் தேடுவோரே, உங்கள் உள்ளம்
உக்கமடைவதாக.

## நற்செய்தி : மத்தேயு 10 : 24 - 33

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது : சீடர் குருவைவிடப் பெரியவர் அல்ல. பணியாளரும் தம் தலைவரைவிடப் பெரியவர் அல்ல. சீடர் தம் குருவைப்போல் ஆகட்டும் பணியாளர் தம் தலைவரைப் போல் ஆகட்டும். அதுவே போதும். வீட்டுத் தலைவரையே பெயல்செபூல் என அழைப்பவர்கள் வீட்டாரைப்பற்றி இன்னும் தரக்குறைவாகப் பேசமாட்டார்களா? ”எனவே, அவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஏனெனில் வெளிப்படாத வாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை. அறியமுடியாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை. நான் உங்களுக்கு இருளில் சொல்வதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல்தளத்திலிருந்து அறிவியுங்கள். ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்றுகூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே அஞ்சாதிருங்கள். ”மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்வேன். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்“ என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் நாம் ““அஞ்ச வேண்டாம்’’ என்ற செய்தி நமக்குத்தரப்படுகிறது. ஏன் அஞ்சக்கூடாது? யாரைப்பார்த்து, எவற்றைப்பார்த்து அஞ்சக்கூடாது? என்ற கேள்விகள் நமக்குள்ளாக எழலாம். கடவுள் நம்மைப் பராமரிக்கிறார் என்ற எண்ணம் நமக்குள்ளாக இருக்க வேண்டும். கடவுளின் பராமரிப்பில் நாம் நம்பிக்கை வைத்தால், நாம் எதைப்பார்த்தும், அஞ்ச மாட்டோம். அதற்கு உதாரணமாக கடவுளின் பராமரிப்பில் வாழும் சிட்டுக்குருவிகள் சொல்லப்படுகிறது. காசுக்கு இரண்டு சிட்டுக்குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்று கூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. லூக்கா நற்செய்தியாளர் இதையே வேறு வார்த்தைகளில் சொல்கிறார்: ““இரண்டு காசுக்கு ஐந்து சிட்டுக்குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றில் ஒன்றையும் கடவுள் மறப்பதில்லையே’’ (லூக்கா 12:6). பொதுவாக இரண்டு சிட்டுக்குருவிகள் ஒரு காசுக்கு விற்கப்பட்டது. ஒரு காசு என்று இங்கு சொல்லப்படுவது ”அசாரியோன்”. இது தெனாரியத்தில் ஆறில் ஒரு பங்கு மதிப்பு உடையது. இரண்டு காசுகளுக்கு நான்கு சிட்டுக்குருவிகள் வாங்குகிறபோது, ஐந்து சிட்டுக்குருவிகளாகக் கொடுக்கப்படுகிறது. ஒரு சிட்டுக்குருவி இலவசம். அதற்கு மதிப்பு கிடையாது. அப்படி மதிப்பில்லாத சிட்டுக்குருவியையும் கடவுள் பராமரிக்கிறார் என்றால், எந்த அளவுக்கு கடவுளின் உருவத்தில் படைக்கப்பட்டிருக்கிற மனிதர்களை அவர் பாதுகாப்பார் என்பது நாம் அறிந்திருக்க வேண்டும். இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை வைக்கிறவர்களால் தான், தங்களது பணிவாழ்வில் நிறைவாக சாதிக்க முடியும். எனக்கு திறமை இருக்கிறது, இதை என்னால் கையாள முடியும், இதை என்னால் நடத்த முடியாது என்று, நமது திறமையை ஒப்பிட்டுப் பார்த்து, நாம் சாதிக்க நினைத்தால் அது தோல்வியில் தான் முடியும். நமது பணிவாழ்வில் கடவுளின் ஆற்றலை, பராமரிப்பை நம்புவோம்.